District Munsif Court, Palani.
O.S.No.46/2022

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

முன்னிலை: திரு.என்.ஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 ஆம் நாள் புதன்கிழமை.

அசல் வழக்கு எண்.46/2022

1.மகேந்திரன் (இறப்பு)
2.எம்.மகேஸ்வரி,
3.எம்.விநேஷ்
4.எம்.ரோகினி .. வாதிகள்
(இ.ம.எண்.3/2022 ல் கடந்த 14.11.2022 ம் தேதிய உத்தரவின்படி 2 முதல் 4 வாதிகள் இறந்துபோன 1 ம் வாதியின் வாரிசுகளாக சேர்க்க அனுமதிக்கப்பட்டு, இ.ம.எண்.6/2023 ல் கடந்த 01.03.2023 ம் தேதிய உத்தரவின்படி பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

/எதிர்/

1.ஈஸ்வரன்,
2.காளியம்மாள். .. பிரதிவாதிகள்
(இ.ம.எண்.5/2022 ல் கடந்த 14.11.2022 ம் தேதிய உத்தரவின்படி 2 ம் பிரதிவாதி தரப்பினராக சேர்க்க அனுமதிக்கப்பட்டு, இ.ம.எண்.6/2023 ல் கடந்த 01.03.2023 ம் தேதிய உத்தரவின்படி பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இவ்வழக்கானது இதுநாள் வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்தும், என் முன்பாக வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் வி.இராஜமாணிக்கம் மற்றும் வி.பச்சைமுத்து ஆகியோர் முன்னிலையாகியும், 2 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.திருமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், இவ்வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு, இன்று விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும், வாதிகள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

வழக்கு சொத்துக்களில் 2 முதல் 4 வாதிகளுக்கு 4/5 பங்கு பாகம் உள்ளது என விளம்புகை செய்தும், அதன் தொடர்பரிகாரமாக 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்திற்கு (கிணறு) கிழக்கே உள்ள வேறு நிலமான புல எண்.825/3 ஏ 2 நிலத்திற்கு செல்ல வழக்கு சொத்தில் உள்ள மரங்களையும், வழக்கு சொத்திற்கு கிழக்கே உள்ள வேலியையும் அகற்றி வழக்கு சொத்தில் நடைபாதை, வண்டிப்பாதை, குழாய் பதிக்கக்கூடாது என்று 1ம் பிரதிவாதி மற்றும் அவர்தம் ஆட்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படி கோரியும், இவ்வழக்கின் செலவு தொகையை வாதிகளுக்கு, 1ம் பிரதிவாதியை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் வாதிகளால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு, இன்று விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் அழைக்கப்பட்டு ஆஜராகவில்லை. வாதிகள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. எனவே, இவ்வழக்கானது வாதிகளின் தவறுகைக்காக பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை இன்று 11.10.2023ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N GNANASAMBANDAM

Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.10.18 18:02:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.